3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுவதற்கான அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> " பேரவையின் 25 (1)-ஆவது விதியின் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை,

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

74. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்--மண்டலம் 3-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குவதை முறைப்படுத்துவது குறித்து பொதுப்பணித் துறையின் 9-8-1995-ஆம் நாளிட்ட 839-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர்வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).]